JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

| CC.No. | 253/2025 | Crime No. | 112/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-4-தீனா** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of February 2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது நெருஞ்சிப்பட்டையில் குடியிருந்து கொண்டு, தோட்ட வேலை செய்து வருகிறேன். சாட்சி ஸ்ரீதர் எனது உறவினர் ஆவார். அதனால் அவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி வீரமணி என்பவரை எனக்கு திருமணம் நடைபெற்ற தினத்தில் பார்த்தேன். அதனால் அவரை தெரியும். கடந்த 30.04.2025 ஆம் தேதியன்று, இரவு 07-08 மணிக்கு நான் எனது வீட்டு தண்ணீர் பைப் அருகே தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஸ்ரீதர் வீட்டிற்கு அருகே சண்டை நடந்து கொண்டிருந்தது. நான் என்னவென்று பார்ப்பதற்கு சென்றேன். பின்னர் நான் தண்ணீர் எடுத்துக் கொண்டு எனது வீட்டிற்கு சென்று விட்டு மீண்டும் திரும்ப தண்ணீர் பிடிப்பதற்காக செல்லும்பொழுது வீர மணிகண்டன் ஸ்ரீதரை கத்தியால் குத்தி விட்டதாக ஸ்ரீதரின் தம்பி லிங்கேஷ் என்பவர் என்னிடம் சொன்னார். இருசக்கர வாகனத்தை எடுத்து வரச் சொன்னார். பின்னர் நான் வண்டியை எடுத்து வருவதற்குள் ஸ்ரீதர் என்பவரை வேறொரு வண்டியில் மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று விட்டார்கள். பின்னர் நான் ஸ்ரீதரின் அம்மா பூங்கொடியை அம்மாபேட்டை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரங்களை சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 30.04.2025 ஆம் தேதியன்று எங்கள் ஊரைச் சேர்ந்த மகேந்திரன் என்பவர் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டது எனக்கு தெரியும் என்றும் பின்னர்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.24 06:47:53 +0530

அன்றைய தினம் இரவு 08.00 மணிக்கு நான் எனது வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது பக்கத்து வீட்டு வாசலில் இருந்து ஸ்ரீதர் ஐயோ அம்மா காப்பாத்துங்க என்று சத்தம் போட்டதை கேட்டு நானும் ஸ்ரீதரின் தம்பி மகேஷ் குமார் மற்றும் அவரது அம்மா பூங்கொடியும் வெளியே வந்து பார்த்தபோது கார்த்தி என்பவர் ஸ்ரீதர் மீது கல்லை எடுத்து எறிந்ததில் ஸ்ரீதரின் தலையில் பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது என்றும் உடனே கார்த்தி, ஸ்ரீதரை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி கார்த்தி தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியை எடுத்து ஸ்ரீதரின் வயிற்றில் இடது பக்கத்தில் குத்தி இரத்தம் வந்து கொண்டிருந்ததை பார்த்து அவர்களை விலக்கக்காட்ட கார்த்தி கத்தியை அங்கே போட்டுவிட்டு ஓடிவிட்டான் என்றும் நான் உடனே ஸ்ரீதரிடம் என்னவென்று விசாரித்தபோது மகேந்திரனின் இறுதி சடங்கு நெருஞ்சிப்பேட்டை சுடுகாட்டில் எருவாமட்டை அடுக்கி சாந்து பூசி அதன் குழியில் பற்ற வைக்க டீசல் ஊற்றிக் கொண்டிருந்தபோது அங்கு மது போதையில் வந்த கார்த்தி தன்னை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டி எதுக்குடா எண்ணெய் ஊற்றுகிறாய் என்று கேட்டதாகவும், அதனால் அவர்கள் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு பக்கத்தில் இருந்து அவரது தம்பி முகேஷ் குமாரும், கலை பாரதியும் பிரச்சனை வேண்டாம் என்று சொல்லி ஸ்ரீதரை வீட்டிற்கு கூட்டி வந்து விட்டதாகவும் கூறினார் என்றும் ஸ்ரீதருக்கு வயிற்றிலிருந்து இரத்தம் அதிகமாக வந்ததால் அவரது தம்பி நிகேஷ் குமார் அவனது பைக்கில் ஏற்றிக்கொண்டு அம்மாபேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூட்டிச் சென்றார் என்றும் வழக்கின் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.24 06:48:03 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani